**அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகம்- 2012**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 உயர் கணக்கீட்டு நடைமுறைகள்

முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது உபயோகத்திற்கு எடுக்கப்பட்ட ரூபா 51,420,673 கிரயமான 08 நிலையான சொத்து விடயங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு அப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

அட்டுறு அடிப்படையில் கணக்கு வைத்தல் நிறுவகத்தின் பொதுவான கணக்கீட்டுக் கொள்கையாக இருந்த போதிலும் பயிற்சி நெறி வருமானம், விடுதிக் கட்டண வருமானங்கள் மற்றும் ஆலோசனைச் சேவை வருமானங்கள் என்பன காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கிடைக்கவேண்டிய கேட்போர்கூட வருமானம் ரூபா 23,000 தொகை மற்றும் விடுதி வருமானமான ரூபா 5,450 தொகை என்பன கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) இரசாயனகூட உபகரணங்களைப் பழுதுபார்ப்பதற்கான உடன்படிக்கைக்காக 2013 ஆம் ஆண்டிற்குரியதான மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 207,200 தொகை முற்கொடுப்பனவாகக் காண்பிக்கப்படாமையின் காரணமாக முற்கொடுப்பனவுகள் அப்பெறுமானத்தினால் குறைவாகவும், வருடாந்த செலவினம் அப்பெறுமானத்தினால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தேசிய உணவு மேம்படுத்தல் சபையினால் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட அரிசி மா நூடில்ஸ் தொழிற்சாலைக்காகவும் தனியார் கம்பனியொன்றில் அரிசி தயாரிக்கும் நிலையத்திற்காகவும் ஆலோசனைச் சேவைகளை வழங்கியதற்காக மீளாய்வாண்டிற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 24,230 கூட்டுத்தொகையானது நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டதன் அடிப்படையில் ஆலோசனைச் சேவை வருமானக் கணக்கும் கடன்பட்டோர் கணக்கும் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆராய்ச்சிச் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 137,290 பெறுமதியான உபகரணங்கள் மூலதனமாக்கப்பட்டு நிலையான சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிராததுடன் அச்சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமையினால் வருடாந்த பெறுமானத் தேய்வு மற்றும் ஆண்டின் பற்றாக்குறை என்பன ரூபா 13,729 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) வங்கிக்கூற்றின் பிரகாரம் வங்கி வரவு வாடகை மற்றும் வங்கிக் கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா 35,787 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 32,307 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையினால் அக்கணக்கு ரூபா 3,480 தொகை குறைவாகவும், வருடாந்த பற்றாக்குறை அப்பெறுமானத்தினால் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிறுவகத்திற்குச் சொந்தமான காணிக்காக 2006 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட ரூபா 161,007 தொகையான ஆதனவரி திரண்ட நிதியத்தில் சீராக்கப்படாமல் ஆண்டின் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(எ) நிலையான சொத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய முன்பக்க மதிலில் கிறீல் வேலியைப் பொருத்துவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 116,990 தொகை கட்டிடம் மற்றும் தோட்டப் பராமரிப்பு செலவினமாக மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை நிறுவகத்தின் வங்கிக் கணக்கில் நேரடியான அனுப்பி வைத்தல்களாக செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 462,377 தொகையான 19 வைப்புக்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 211,479 தொகையான பிரயாணச் செலவின முற்பணங்களைத் தீர்க்காமல் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அப்பணத்தை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2000 யூன் 30 ஆந் திகதி நெல் சந்தைப்படுத்தல் சபையின் சகல சொத்துக்களும் பொறுப்புக்களும் 2006 ஒக்டோபர் மாதத்தின் போது நிறுவகத்திற்கு சட்டரீதியாக கையளிக்கப்பட்டிருந்ததுடன் நீண்ட காலமாகக் காணப்பட்ட ரூபா 2,513,330 தொகையான கிடைக்கவேண்டிய 12 கணக்கு மீதியும் ரூபா 1,138,123 தொகையான செலுத்த வேண்டிய 11 கணக்கு மீதியும் 2013 யூன் 24 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2000 யூன் 30 ஆந் திகதியின் பின்னர் ஏற்பட்ட 2 வருடங்களுக்கு மேற்பட்ட 10 வருட காலம் வரை காணப்பட்டதும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதுமான ரூபா 490,893 தொகையான கிடைக்க வேண்டிய 11 கணக்கு மீதிகளை அறவிடுவதற்காகவும் ரூபா 488,890 தொகையான செலுத்தவேண்டிய 21 கணக்கு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்காகவும் வினைத்திறனான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக செய்யப்பட்ட செலவினங்கள் அந்தந்த சந்தர்ப்பங்களின் போது மீளளிப்புச் செய்து கொள்வதற்கான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியின் போது விவசாய அமைச்சிலிருந்து ரூபா 61,123 தொகை அறவிடவேண்டியிருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்ட கணக்கு விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 89,795,633 | நிலையான சொத்துப் பதிவேடு |
| (ஆ) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 1,367,330 | (i) கடன்பட்டோர் பதிவேடு |
| | | | (ii) கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல் |
| (இ) | ஏனைய கடன்கொடுத்தோர் | 328,295 | (i) கடன்கொடுத்தோர் பதிவேடு |
| | | | (ii) கடன்கொடுத்தோர் மீதி உறுதிப்படுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அறிக்கைகள் அச்சிடல் செலவினம் | 177,250 | (i) அறிக்கைகளை வெளியிடுதல் தொடர்பான பட்டோலை |
| | | | (ii) இறுதியிருப்பு தொடர்பான பட்டோலை |
| (உ) | நூலகப் புத்தகங்கள் | 295,361 | நுகர்வுப் பதிவேடு |
| (ஊ) | நடைமுறைப் பொறுப்புக்கள் | | |
| | ---------------------- | | |
| | முற்பணம் | 520,086 | விபரமான பட்டோலை |
| | கேள்வி வைப்புக்கள் பிரதான அலுவலகத்தில் நிறுத்தி வைத்தல் | 279,854 | |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நி.பி. 104 | நிறுவனத்திற்குச் சொந்தமான 02 வாகனங்கள் 02 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாகியமையினால் ரூபா 183,255 நட்டம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக நி.பி. இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிருவாகச் சுற்றுநிருபம் | |
| 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க மற்றும் 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(i) | நிறுவகத்திற்குச் சொந்தமான ஓடும் நிலையில் காணப்படுகின்ற 07 குழாம் வாகனங்களுக்கு அரசாங்க இலட்சினையோ அல்லது நிறுவகத்தின் |

| | |
|---|---|
| ஆம் இலக்க மற்றும் 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய 2002/01 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபங்கள் | பெயரோ அச்சிடப்பட்டிருக்கவில்லை. |

(இ) திறைசேரி சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்திற்குச் சொந்தமான ரூபா 5,689,901 கிரயமான கணனி மற்றும் உப பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.7 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 பெப்ரவரி 09 ஆந் திகதி 13/2008(ii) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனம் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மாதாந்த எரிபொருள் லீற்றர் அளவில் சகல அலுவலகத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். மேலதிக எரிபொருள் ஏற்பாடு தேவைப்படுமாயின் அதற்காக அமைச்சுச் செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தின் தலைவர், பிரதித் தலைவர் மற்றும் பணிப்பாளர் என்போரால் எரிபொருள் எல்லையினை விஞ்சி முறையே ரூபா 106,751 தொகை மற்றும் 10,406 தொகை மற்றும் 45,156 தொகை பெறுமதியான எரிபொருள் பெறப்பட்டிருந்த போதிலும் அதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் கூட்டிணைந்த திட்டத்தை உள்ளடக்கிய நிறுவகத்திற்குத் தேவையான நிருவாக மற்றும் நிதிப் பிரமாணங்களைத் தயாரிப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 400,000 தொகையான முற்பணம் உரிய செயற்பாடுகளில்

நிறைவேற்றப்படாதிருக்கும் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி ஆண்டின் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,893,838 தொகை பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 7,480,881 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,587,043 ஆன அதிகரிப்பினைக் காணக்கூடியதாக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினங்களுக்காக பொதுத் திறைசேரியிடமிருந்து வழங்கப்பட்ட ரூபா 52,782,809 தொகையிலிருந்தும் சுயமாக உழைக்கப்பட்ட ரூபா 20,917,075 தொகையான வருமானத்திலிருந்தும் ஆண்டின் செலவினங்களைச் செய்ததன் பின்னர் மிகை ரூபா 7,258,200 ஆக இருந்தது. அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பொதுத் திறைசேரியிடமிருந்து வழங்கப்பட்ட ரூபா 63,340,951 தொகையிலிருந்தும் சுயமாக உழைக்கப்பட்ட ரூபா 18,588,181 தொகையான வருமானத்திலிருந்தும் செலவினங்களைச் செய்ததன் பின்னர் மிகை ரூபா 5,716,309 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்ட நிலையான சொத்திற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 8,939,932 தொகையும் பணிக்கொடை கொடுப்பனவிற்கான ஏற்பாடு ரூபா 3,083,813 தொகையுமாக ரூபா 12,023,745 கூட்டுத்தொகையான சீராக்கங்கள் மீளாய்வாண்டின் பற்றாக்குறைக்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மரக்கறி மற்றும் பழங்கள் என்பவற்றின் போக்குவரத்தின் போது ஏற்படுகின்ற சேதத்தினைக் குறைப்பதற்காக பிளாஸ்டிக் உறைகளின் பாவனையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 06 வருடங்களுக்கு முன் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,056,023 பெறுமதியான 04 வகையான 5181 பொதியிடல் உபகரணங்கள் 2013 ஆகஸ்ட் மாத இறுதிவரையிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நலனாளிகளுக்காக 50 சதவீத நலனாளிகளின் பங்களிப்பின் அடிப்படையில் வழங்குவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 437,500 பெறுமதியான 7 நடமாடும் வியாபாரக் கொட்டகைகள் கணக்காய்வுத் தினமான 2013 யூன் 24 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது.

(இ) மரக்கறி மற்றும் பழங்கள் என்பவற்றின் போக்குவரத்தின் போது ஏற்படுகின்ற சேதத்தினைக் குறைப்பதற்காக பிளாஸ்டிக் உறைகளின் பாவனையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட நிதியேற்பாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பிளாஸ்டிக் உறைகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 12,695,600 தொகை அந்நிகழ்ச்சித்திட்டத்தை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தப்படாமல் செயற்பாடின்றி நிறுவகத்தின் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) "அபி வவமு ரட நகமு" தேசிய செயற்திட்டத்தின் கீழ் 50 சதவீத நலனாளிகளின் பங்களிப்பின் அடிப்படையில் உபகரணங்களை வழங்கும் செயற்திட்டங்களிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 2,442,895 தொகையான நலனாளிகளின் பங்களிப்பு அந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக அல்லது புதிய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக ஈடுபடுத்தப்படாது நிறுவகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.1.1 ஆராய்ச்சிச் செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆராய்ச்சி திட்டத்தை தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல், அமுல்படுத்துவதற்காக அங்கீகாரத்தை வழங்குதல், காலாண்டு ரீதியான செயல்முன்னேற்றத்தைப் பகுப்பாய்வு செய்தல், செயல்முன்னேற்ற மீளாய்வு மற்றும் இறுதி அறிக்கைகளை மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் என்பன இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைச் சபையினால் (சீஏஆர்பீ) முறையாக செயற்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) நவீன வடிவமைப்பு முறைகளின் பாவனை, அபிவிருத்தி செய்யப்பட்ட வடிவமைப்பு முறைகளை இலக்காகக் கொண்டு குழுக்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், வினைத்திறனான பொருள் போக்குவரத்து முறைமை மற்றும் பொதியிடல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் நிறுவகத்தின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் தொழில்நுட்பங்களின் மூலம் ரூபா 658,890 கிரயங்களை ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொறிமுறைகள் மற்றும் உற்பத்திகளை பிரதேசத்தில் பரவலாக்குவற்கான வினைத்திறனான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தினால் சில வருடகாலமாக பாரிய கிரயங்களைச் செய்து ஆராய்ச்சிகளின் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்ட இயந்திராதிகள் நிறுவகத்தின் இருப்புப் பதிவேடுகளில் பதிவதற்கு, ஆக்கஉரிமை அனுமதிப்பித்திரத்தைப் பெற்று வடிவமைக்கும் உரிமையைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இயந்திரத்தின் நிலைபெறு தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆராய்ச்சியின் விளைவான இயந்திர சூத்திரங்கள் அல்லது தொழில்நுட்பத்தை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2002 ஆம் ஆண்டு முதல் நிறுவகத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட 21 இயந்திராதிகளின் கிரயத்தினை இனங்காணாமல் நிறுவகத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2009/2010 ஆம் ஆண்டுகளில் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்ட தொழில்நுட்பங்களை பிரதேசங்களுக்கு வழங்கும் நோக்கத்தையுடைய ஆராய்ச்சிகளை வெளிக்கொணரும் மாநாடு (Research Syposium) 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்தது. இந்த மாநாட்டின் மூலம் 23 ஆராய்ச்சிகள் வெளிக்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட ஆராய்ச்சிகளை பிரதேசங்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு 2013 யூன் 21 ஆந் திகதி வரையிலும் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவகத்தின் பிரதான நோக்கமான அபிவிருத்தி செய்யப்பட்ட வடிவமைப்பு முறையில் இலக்கிடப்பட்ட குழுக்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

---

படஅத விவசாய தொழில்நுட்ப தோட்டத்தில் 2010 இன் விவசாய வாரத்தை காட்சிப்படுத்துவதற்காக மரக்கன்றுகளை போக்குவரத்துச் செய்வதற்காக விவசாய அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 15,000 பெறுமதியான நடுத்தர அளவிலான 50 பிளாஸ்டிக் பொதிகளுக்காக பணத்தினை அறவிடுவதற்கோ அல்லது வழங்கப்பட்ட பிளாஸ்டிக் பொதிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

---

2000 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு நெல் சந்தைப்படுத்தும் சபையில் காணப்பட்ட சொத்துக்களை நிறுவகத்திற்கு கையளிக்கும் போது உரிய பதிவேடுகளிலும் நிதிக்கூற்றுக்களிலும் ரூபா 11,450 கிரயமாகக் காண்பிக்கப்பட்டிருந்த கை உழவு இயந்திரம் பௌதீகமாக நிறுவகத்தில் காணப்படவில்லை.

## 3.4 செயற்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

நிறுவகத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 942,907 பெறுமதியான 06 வாகனங்கள் 03 - 10 வருடகாலம் தொடக்கம் செயற்பாடற்றுக் காணப்பட்ட போதும் அந்த வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்திற்குச் சொந்தமான காணிக்காகச் செலுத்த வேண்டிய வாடகைப் பணம் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குச் செலுத்தப்படாமையின் காரணமாக வட்டியாக ரூபா 53,985 தொகை 2012 செப்தெம்பர் 15 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்திற்குரிய ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத விற்றுத்தீர்க்கும் நிலையில் காணப்பட்ட 04 வாகனங்களுக்காக மீளாய்வாண்டிற்கான காப்புறுதித் தவணைப்பணம் மற்றும் வருமான அனுமதிப்பத்திரங்களுக்காக ரூபா 47,262 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவகத்தின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.4 ஆம் பிரிவிற்கு முரணாக அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் மூன்று உத்தியோகத்தர்கள் விவசாய அமைச்சின் அமைச்சரின் அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் அம்மூன்று உத்தியோகத்தர்களுக்கும் 2012 ஆம் ஆண்டிற்காக நிறுவகத்தினால் ரூபா 772,846 தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன.

**3.7 பதவியணியினர் நிருவாகம்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் பின்வருமாறிருந்தது.

| | **அங்கீரிக்கப்பட்ட** | **உள்ளபடியான** | **வெற்றிடங்கள்** |
|---|---|---|---|
| பதவி நிலை | 41 | 23 | 18 |
| பதவி நிலையல்லாத | 51 | 24 | 27 |
| சிற்றூழியர் | 61 | 29 | 32 |
| | 153 | 76 | 77 |

நீண்ட காலமாகக் காணப்பட்ட இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 வாகனப் பயன்பாடு**

நிறுவனத்திற்குரிய ஒரு மோட்டார் வாகனம் 2011 ஆகஸ்ட் 01 ஆந் திகதி தொடக்கம் தற்காலிகமாக விவசாய அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் நிறுவகத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 100,186 செலவில் வாகனம் பழுதுபார்க்கப்பட்டிருந்தது.

கணக்காய்வுத் திகதியான 2013 யூன் 21 ஆந் திகதி வரையிலும் மீள நிறுவகத்திற்குப் பெற்றுக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.9 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் மூலம் இனங்காணப்பட்ட மீளமைக்கக்கூடிய 41 பொருள் விடயங்களும், விற்பனை செய்யக்கூடிய 21 பொருள் விடயங்களும், அழிக்கப்பட வேண்டிய 270 பொருள் விடயங்களுமாக

332 பொருள் விடயங்கள் தொடர்பாக நி.பி. 772 இன் பிரகாரம் பொருத்தமான வகையில் அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பௌதீக இலக்குகள் காண்பிக்கப்பட்டிராமையினால் நிதி இலக்குகளை அடைந்து கொள்வதற்குரிய பௌதீக நிலையை அடைந்ததா என்பதை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிறைவேற்றிய செயல் முன்னேற்றத்தை காலரீதியாகப் பரீட்சிப்பதற்கான போதியளவான முறைமையும் நிறுவகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தின் பல்வேறு பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் உள்ளகக் கணக்காய்வினை மேற்கொண்டு அறிக்கை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கையிடல்கள் தொடர்பாக முகாமையினால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமையினால் உள்ளகக் கணக்காய்வு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான பெறுமதிகளுக்கிடையே 28 சதவீதம் தொடக்கம் 267 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது போதியளவான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏதாவது விடயமொன்றிற்காக மேலும் ஒரு செலவின விடயத்தில் எஞ்சியுள்ள நிதியேற்பாட்டை மாற்றுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 14 செலவின விடயங்களுக்காக உரிய அங்கீகாரமின்றி சேமிக்கப்பட்ட செலவின

விடயங்களின் நிதியேற்பாடு மாற்றப்பட்டு 2012 ஆம் ஆண்டில் ரூபா 6,390,118 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது.

**4.4 ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படுதல்**

2008, 2009 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை 2012 யூன் 07 ஆந் திகதி சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை சபைக்கு முன் வைக்கப்பதற்காக 2013 பெப்ரவரி 26 ஆந் திகதி பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையையும் சபைக்கு முன் வைக்கப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் நிறுவகத் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டிருந்தது. கீழே காட்டப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) பதவியணியினர் கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(உ) ஆராய்ச்சி செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

(ஊ) வாகனக் கட்டுப்பாடு